உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௯	யுவ மார்கழி–1935–டிசம்பர்	திங்கள் ௫

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே:

தனவணிக சமூக நிலை.

மாவாழு மேழுவழி நகரத்தார்க் கென்றும்
கோரெழுஞ் செல்வக் குலதெய்வம்—மாவாழ்
மரகத விநாயகனை மாமலர் தூய் வாழ்த்த
வரநலவாழ் வெல்லாம் வரும்.

தனவணிக சமூகப் பெரியோர்களே! சகோதரர்களே!!

இந்நிலவுலகிற் பல பாகங்களிலும் பலப்பல சமூகத்தினர்களாக மக்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றனர். தங்கள் வாழ்க்கையைக் கட்டும் செட்டுமாக நடாத்தும் சமூகமே நெடிது நிலவும். தனவணிக சமூகமானது தொன்று தொட்டு சிறப்புற்று விளங்குவதன் காரணம் வரம்பின் திறனேயாகும்.

நற்சமூகத்தினர், காவிரிப்பூம் பட்டினத்தில் மன்னர் மதிக்க மன்னர்க்கு முடிசூட்டும் முதன்மை பெற்று இரத்தின மகுட தன வைசியர் என்னும் சிறந்த அபிதானம் பெற்று விளங்கினர்; அரச சேவை புரிவதில்லை; அரசரையும் அரசாங்க சேவைபுரியும் பிராமணரையும் வணங்குவதில்லை என்னும் வரம்புகளெல்லாம் அமைத்து,

வரம்பு கடவாது இருந்து "மன்னவரைக் கூட வணங்காதார்" எனப் பாராட்டப்பெற்றனர்; காவிரிப் பெருக்கைப் பஞ்சுப் பொதிகளால் அடைத்து அணை கட்டினர்; அரசன் பொறுமையினால் தங்கள் வீட்டு வெள்ளிக் கதவைப் பறிமுதல் செய்ததைப் பொருட்படுத்தாது தங்கக் கதவம் இணைத்த சதுரர்களாயிருந்தனர்; ஏன் மணப்பந்தர்க்கு நற்பவளக்கால் நாட்டினர்; ஆண் மக்கள் எல்லோரும் நல்ல தமிழ்க் கல்விமான்களாக கணக்குக்காரியங்களில் தேர்ச்சியுள்ளவர்களாக, ஏடெழுத்தாணி கைக்கொண்டிருந்தனர்; பெண் மக்கள் மாமன், மாமி, கணவன், கொழுநன், நாத்தி, நங்கை ஆதியவர்களை நன்கு மதித்தும் வீட்டுப் பொருள்களை மிக மிகப் பேணியும், வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தியும், ராட்டினம் சுழற்றி நூல் நூற்றும்சிக்கெனத்துடன் கற்பின் மிக்காராய் குடும்பகாரியங்களை கண்ணும் கருத்துமாக நன்றூற்றி வந்தனர். சமூக ஒற்றுமை வீறி விளங்கியது, சமூகத் தலைவர்கள் எல்லோரையும் கொண்டணைத்து காரியங்களைச் சீர்பெற நடாத்தி வந்தனர். பெரியவர்களுக்குச்சிறியவர்கள் மரியாதையுடன் கீழ்ப்படியும் வழக்கமும் பெரியவர்கள் சொல்லைச்சிறியவர்கள் தட்டாமல் "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" எனக் கேட்கும் வழக்கமும் இருந்தன. ஆகலால் சமூக ஒற்றுமைக்கு வன்மை மிகுத்திருந்தது. சமூகம் முழுமையுமே சைவசமயத்தைக் கைக்கொண்டு, ஆறிட்ட செஞ்சடையார்க்கு அன்பு பூண்டொழுகும் நீறிட்ட நெற்றியராய் விளங்கினர். மரகத விநாயகரையும் ஸ்படிகலிங்க மூர்த்தியையும் பூஜித்து, குருஸ்தானங்களைக் கொண்டு குருமூர்த்திகளை வழிபட்டு, ஐந்தெழுத்தாகிய மந்திரோபதேசம் பெறும் வழக்கத்தை யாவரும் கைக்கொண்டிருந்தனர். சிவவிரத அநுஷ்டானங்களைக் குலதருமமாகக் கொண்டு, சிவ விரதங்களிற் சிறந்த பிள்ளையார்நோன்பு, கார்த்திகை விரதம், ஆகியவைகளை யாவரும் ஒருங்கு அநுஷ்டிக்கலாயினர். "கோயில் விளங்கக் குடிவிளங்கும்" என்பதைக் கடைப்பிடித்து சிவாலயத் திருப்பணி ஆதிய சிவதருமங்களும், சிவாலய வழிபாடும் செய்வாராயினர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" "அஃமுங் காசுஞ் சிக்கெனத் தேடு" என்னும் முதுமொழிகளைப் போற்றிக் கடல் கடந்து சென்று சிக்கெனமாகப் பொருளீட்டிவரலாயினர். குடும்ப வாழ்க்கை நடத்தும் தங்கள் ஊர்களிலும் பிற வேறுதலங்களிலும் கோயில் குளங்கள், சத்திரம் சாலைகள் அமைத்தும், அன்னதானங்கள் செய்தும், பொருளீட்டும் ஊர்களிலும்திருக்கோயில் திருமடம், ஆதிய அமைத்தும் அன்னதானம் செய்தும் வருவாராயினர். ஒவ்வொரு சமூகமும் வெவ்வேறு திறமையினால் சிறப்புற்று விளங்குமாயினும் நம் சமூகமோ யாவரும் நம்பும்படியான நாணயப் பொறுப்பை நிலைநிறுத்தி பணப்பற்று வரவு செய்வதில் தேர்ச்சியுற்று,

"கொண்டபடி போலும்விலை பேசிலாபஞ் சிறிது
கூடிவர நயமுரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வராதபடி
குறுகவே செலவுசெய்வார்
வண்டப்புரட்டர்தாம் முரிதந்து பொன்னடகு
வைக்கினும் கடனீந்திடார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையி லெலாம்கொடுப் பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீணிற் செலவிடார் உசிதமான திற்
கனதிரவியங்கள் விடுவார்
மண்டலத்தூடு கனவர்த்தகம் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிதுகாண்
................"

என்று கூறிய குமேரசசதகப்பாவுக்குஇவர்களே இலக்கியமானார்கள். இவர்களின் பழக்க வழக்க ஒழுக்க நியமங்களை அறிந்த பாண்டிய மன்னர் தன்னாட்டிற்கு பெருமை மிகச் சிறந்த நற்குடியாளர் களாகிஇவர்களைவேண்டி அழைத்துவந்துவேண்டும் வசதிகளும்வழங் கினர். பாண்டி நாட்டில் ஒன்பது நகரச்சிவாலயங்களை அமைத்தும், மந்திரோபதேச குருமூர்த்திகள் அமர்ந்தருளும் மடங்களை அமைத் தும், தாங்கள் வாழும் ஒவ்வொரு ஊர்களிலும் கோயில் குளங்கள் அமைத்தும், ஒவ்வொரு ஊர்க்கூட்டம், வட்டகைக் கூட்டம் கோயில் வாசற் கூட்டம், தொண்ணூற்றாறார்க் கூட்டம் ஆகியகூட் டங்களின் மூலம் தங்களுக்கு ஆக வேண்டுவனவற்றைத் தீர்மா னித்து கட்டுப்பாடு கடவாதவர்களாக வாழ்வாராயினர். பொரு ளீட்டும் தலங்களிலும் நகரக் கூட்டங்களும் கட்டுப்பாடுகளும், மகிமைமூலம் கோயில் மடம் ஆகிய பரிபாலனங்களும் செய்து வருவாராயினர். தம் இனத்தாருக்குள் நேரும் வழக்குகளை தம் இனத்தவருள் சில பெரியார்கள், பங்காளிகள், ஊர் நகரத்தார்கள், கோயில் வாசல் நகரத்தார்கள், மடத்துவாசல் நகரத்தார்கள், தொண்ணூற்றாறார் நகரத்தார்கள் மூலம் தீர்த்துக்கொள்வது என்ற வழக்கத்தையும் கையாண்டு வந்தார்கள். தவறான வழிகளில் செல் லாதிருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டே அரசதண்டனைக்கு உள்ளானவர்களைச்சாதியைவிட்டுநீக்குவதென்று தீர்மானித்திருந்தார்கள். சொல்லிலும், செயலிலும் உண்மைக் கொள்கையுடனே ஒழுகுவாராயினர். தெய்வ நம்பிக்கையிலும், சிவ புண்ணியச் செயல்களிலும் சமூக முழுமையும் ஈடுபட்டிருந்

தலினால் வேறு எச்சமூகத்தினர்க்கும் இல்லாத பெருஞ் சிறப்பு எய்துவாராயினர். சமூகம் சிதையாதிருக்கவே தாங்கள் வாழ்ந்து வருதற்குப் பாண்டி நாட்டில் நான்கெல்லை வகுத்து முள்ளார்கள். சிறிது சிறிதாகப் பொருளீட்டுதல், ஈட்டிய பொருளைப் போற்றுதல், வரவறிந்து வரவிற்குத் தக்க செலவு செய்தல், தீவழி புகாது நன்னெறிக்கண் நிற்றல், நல்லறம் புரிதல் ஆதிய சிறப்புகளை மேற்கொள்வாராயினர்; இத்தகு சீரிய செயல்களால் தருமசீலர்கள் என்னும் பெரும் புகழ் உலகம் முழுதும் பரவி மன்னர் பின்னராய் வாழ்ந்து வருவாராயினர். எந்தக் காரியத்தையும் தெய்வ நம்பிக்கையுடன் தொடங்குவதும், கணக்குக் காரியங்கள் எழுதத் தொடங்கும்போதெல்லாம் முதலாவதாக (பிள்ளையார் சுழி) உ, சிவமயம், சுவாமிகள் பெயரால் வரவு ஆகியவைகளுடன், சுவாமி துணை போடுதல் முதலான சிறப்புகளை ஒருங்கே கைக்கொண்டவர்கள் நம் சமூகத்தினரே.

“ஆக்கமிங் கொருவரா லணுக வேண்டுமே
லூக்க முண்டாவரே லுறுவர்”
“ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு”

என்பன உணர்ந்து ஊக்கமுடையராய் ஆக்கம் பெறுவாராயினர்.

“கேடாதழிக்கிற பாடாய் முடியும்” எனத் தெரிவர்; “பொருடனைப்போற்றி வாழ்”வர்; “வளவனாயினும் அளவறிந்தழித்துண்” என்றபடி வரவறிந்து செலவு செய்வர்; வரவுக்கு மீறிய செலவு செய்வோரை மதியார். “மைவிழியார் தம் மனையகன் றொழுகுவர்” “அகலக்கால் வையாதே”; “அகலக் கோவணங்கட்டாதே” என்பர்.

சைவ சமயிகளாக சத்தியம் தயை பொறை அடக்கம் சமநிலையாதிய நற்குணங்களுடன் தேவார திருவாசகாதி திருமுறைகளையுஞ் சைவசமயநூல்களையும் போற்றிசிவ நேசப்பெருஞ் செல்வர்களாக விளங்கும் இவர்கட்குச் செட்டி என்னும் பெயர் செட்டின் தன்மையினாலும், சிரேட்டம்-மேன்மை எனப் பொருள்தரும் வடமொழியின் மூலம் சிரேட்டி—செட்டி என்பதனாலும் வந்ததென்பர். இவர்கள் மனையறங்களில் ஆணுக்குக் கார்த்திகைப் புதுமையும், பெண்ணுக்குத் திருவாதிரைப் புதுமையும் செய்வது, சைவசம்பிரதாயமாகும். மாப்பிள்ளை பெண் பிறந்தவகைக்குரிய கோயில்களில் பாக்கு வைத்துப் பதிவு செய்து மாலை வந்தபின்னரே மணம் நிகழும். சுபாசுபங்களிலெல்லாம் விபூதியும் சங்கும் கொள்வர். மந்திரோபதேசம் பெற விபூதி கௌரி சங்கம் தரித்து வரிசையாகவரும் அழகு பொலிவுற்று மிளிரும். குன்றக்குடிவாழ் குமர நாயகனைக் குலதெய்வமாகக் கொண்டு, ஆங்கும் பழநியம்பதியிலும் வசிக்கும் ஊர்களிலும் வர்த்தகம் செய்யும் ஊர்களிலும் திருவண்ணாமலையாதிய திருத்தலங்களிலும் அன்னதானங்களும், திருநந்தனவனம் பசுமடம், பாடசாலை யாதிய பல தருமங்களும் செய்வாராயினர்.

(வரும்)

உ

தமிழ் மொழியும் சிவநெறியும்.

(தமிழ்மறை வரலாறு)

(கோவிற்பட்டி, தமிழ்ப் பிரமசூத்திராசிரியர், உயர்திரு, சுவாமி, விருதை, சிவஞானயோகிகள்.)

(அசம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தொன்மையைப் பற்றி இந்திய புத்த சரித்திரம் (Buddhist India) என்ற ஆங்கில நூலாசிரியர் கூறியனவும், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ் மொழி வரலாற்றில் வடமொழிக் கலப்பு என்ற அதிகாரத்தில் பல அரிய நுண்பொருள்கள் தென்மொழியினின்று வடமொழிக்கு வந்தமையைப் பற்றிக் கூறியிருத்தலும் இதனை யாதரிக்கும். சுமார் 3000 ஆண்டுகட்கு முன்னர்ப் பாஸமகாகவியா லியற்றப்பட்டதென்று கூறப்படும் நாடகங்களுள் முக்கியமான ஸ்வப்பன வாஸவதத்தம் என்பது தமிழுரசனாகிய உதயணன் காதையை ஆதாரமாய்க்கொண்டு வத்ஸராஜன் என்ற பெயர் தந்தெழுதப்பட்டுளது. சங்கீத ரத்நாகரத்தில் தமிழ்த் தேவாரப் பண்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பெரிய புராணம் வடமொழியிற் பெயர்க்கப்பட்டுள்ளது. இவை முதலியன அவர் கூற்றுக்களுக் குதாரணங்களாம்.

திருமூலர்:— "செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பிலெழு பதுகோடி யுகமிருந் தேனே".

என்று கூறுகின்றனர். யுகத்தை ஓராண்டாகக் கொள்ளினும் எழுபதுகோடி ஆண்டாகின்றது. ஆகலால் சிவநெறி முதற்கண்ணுலகிற் றோன்றிய காலம் வரையறுக்கக் கூடாததா யிருக்கின்றது. மிகச் சுருங்கியதற்காலக் கணக்கை வைத்து நோக்கில் மேற் கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகட்கு நெடு நாண் முன்னரே தமிழ் சீர்தேற்ற மடைந்திருந்த தென்றும் தலைச் சங்க காலந் துவக்கிச் சைவ சமயமிருக்கிற தென்றும் சைவசமயத்துக்குப் பாண்டிநாடே பழம்பதியென்றும் இச்சைவம் தமிழினின்றே ஏனைய மொழிகளுக் குச் சென்ற தென்றும் விளங்குகின்றது.

முன்னர்ச் சென்னைக் கவர்னராயிருந்த சர் கிராண்ட் ப்பிரபு ஒருநாட் பிரசங்கத்தில் "தமிழின் தொன்மையின் மு ஆரியர் களுடைய தொன்மை சற்று நேரத்திற்கு முன் வந்த புட்டார்த் தந்தி யொக்கும்" என்றதும் சென்னை ஐகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் பிரமஸ்ரீ சதாசிவ அய்யரவர்கள், சென்னை மெய்கண்ட சந்தான சபையிற் செய்த பிரசங்கமும் இக்கருத்தை ஆதரிக்கும்.

சைவ சமயக்கருத்து.

நமது இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் புலப்படும்பொருள்கள் மண், நீர், தீ, காற்று, விண், கதிரவன், மதி, ஆவி என எட்டுப் பொருள்கள். அவற்றில் முன்னேழும் அசேதனமும் ஆவி சேதன முமாம். எல்லா உலகங்களும் கதிர்மதிகளும் பௌதிக வடிவங்கள். உலகத்துள்ள இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்களின் வியப் பான அமைப்புகளையும் ஒன்றுக்கொன்று பயன்படு நலத்தையும் உற்று நோக்குவார்க்கு அவற்றை முற்றுமோர்ந் தியற்றுவா னொரு வனுள னென்று தோன்றுமற் போகாது. புகைகண்டுழி நெருப் புண்டென உணர்தல் போல அதிவிசித்திரமான உலகப்படைப்பை நோக்குழிப் படைப்பான் ஒருவன் உளன் என்று கருதலளவை யாற் கொள்ளப்படுகின்றது. ஆங்கில தத்துவசாத்திரியாகிய ஹெர் பர்ட் ஸ்பென்சரும் (Herbert spencer) அறிவுள்ள மூலகாரண மொன்றுண்மை மெய் என்கின்றனர். கடவுள் எல்லாவல்லமை யும் எல்லா அறிவுமுடையர் எங்கும் நிறைந்தவரென்பது கொஞ்சங் குறைய எல்லா ஆத்திகருமொப்பியவுண்மை. வியாப்பியப்பொருள்க ளில்லாவிடில் வியாபகனுமில்லையாது. ஆதலால் சேதனா சேதனப் பிரபஞ்சங்கள் வியாப்பியமும்கடவுள் வியாபகனுமாம்.

எங்கும் நிறைந்தவனாகிய சிவன்பதி அவனை அளவைகளானும் அறிவானும் அறியும்சேதனன் ஆன்மா. அவர் ஆணவம்மாயைகன்ம மென்னும் 1, 2, 3 மலங்களுடைமையால் முத்திறப்படுவர். ஆன் மாக்கள் கன்மவேற்றுமையால்பற்பலபிறப்பிறப்புகளடைந்து சுழலு மெண்ணிறந்தவர். ஆவிகளின்கன்மங்களுக்கேற்பத்தனுகரணபுவன போகங்களாயுதவுவது மாயை, அல்லது பாசம். அது, சுத்தமாயை அசுத்தமாயையென்றிருவகைப்படும். மேற்கூறியகடவுள், ஆவி, மாயை, என்றமுப்பொருள்களும் அநாதி நித்யம். கடவுள் எல்லாஞானமும் எல்லாவல்லமையும் எல்லா நல்ல பண்புகளும் இரக்கமும் உடைய வன். இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இன்ப வடிவன். எங்கும் நிறைந்த ஒருவன். ஆன்மாக்கள் சேதனராயினும் செம்பிற் களிம்பு போன்றுள்ள ஆணவமலத்தால் இச்சா ஞானக் கிரியாசத்திகள் மறைக்கப்பட்டு இருட்டு வீட்டிற் குருட்டுக் கிழவி போல அநாதி கேவலத்திற் கிடக்கின்றன. அவ்வான்மாக்களுக்கு இறைவன் அவற்றின் இச்சை கன்மங்களுக்குரிய தனுகரண புவன

போகங்கள் தந்து அதனால் அறிவு முதிர்ந்து பரிபாக மெய்தி வீடு பெற்றுத்தன்னைப்போலப்பேரின்ப நுகர்ந்திருக்கச்செய்கின்றனன். அவனொருவனே சர்வலோகங்களையும் படைத்தளித்தழிப்பவன். உலகில் இல்வழக்கினர் (நாத்திகர்) நான்கு பூதங்களின் சேர்க்கையா னும் அவற்றின் மிகுதி குறைவானும் உலகம் தோற்றம் நிலையிறுதி யடைகின்றன வென்கின்றனர். காலவாதிகள் காலமே காரணமென்கின்றனர். சுபாவவாதிகள் இயற்கையே காரணமென்கின்றனர். அவையனைத்துஞ் சடமாகையால் அவற்றுக்கு அறிந்தியற்றுங் காரணத் தன்மை பொருந்தாது. அறிவுள்ள ஜீவான்மாவைக் காரணமென்பதும் தனக்கெனச் சுவாதீன மின்றிச் சுகதுக்கமடைதல் தன் எண்ணத்தாற் பிறப்பிறப் படையாமை, உலகிலொன்றைப்படைத்தல் காத்தல் அழித்தல் வன்மை தனக்கில்லாமை சிற்றறிவுசிறுதொழில் சிறுதன்மையுடைமை முதலியவற்றானும் பிறவற்றானும் பொருந்தாது. சர்வ ஆன்மகோடிகளையும் அறிவுக்கு அறிவாய் நின்றறிவித்தியக்கும் அந்தரியாமியாகிய ஒருவனே தெய்வம் அவனைப் பற்பல மதத்தரும் மொழியாளரும் வெவ்வேறு பெயராற் கூறுகின்றனர். பகலைச் செய்யும் கதிரவனை வடமொழியார் சூரியனென்றும், ஆங்கிலேயர் சன் (Sun) என்றும், இந்துஸ்தானியர் சூரஜ் என்றும், இலத்தீனர் சோலர் (Solar) என்றும், இன்னும் பலமொழியாளர் பலவாறுகூறினும் குறிக்கப்படும்பொருளொன்றேயாவது போல எம்மதத்தவர் எப்பெயராற் றெய்வத்தைக் கூறினும் குறிக்கப்படுதெய்வமொன்றேயாம். ஒரு பொருளின் ஒவ்வொரு பெயரும் அப்பொருளின் இயல்பி லொன்றையே குறிக்கின்றமை போலக் கடவுள் ஒவ்வொரு நாமமும் அவன் கல்யாண குணங்களிலொன்றையே குறிக்கின்றது.

சுவே. 4. 19.

(யஸ்யநாம மகத்யசக) எவன் பெயர் (அவன்) பெரிய புகழ்.

கூர்ம புராணம்.

"ஹரஸ் ஸர்வஸ்ய ஹரணாத விபுத்வாது விஷ்ணுருச்யதே
ஸர்வக்ஞஸ் ஸர்வவிக்ஞாநா தவநாதோ மிதிஸ் மிருதக"

(இ-ள்.) எல்லாவற்றையும் அழிப்பதால் அரன் என்றும், வியாபிப்பதால் விஷ்ணுவென்றும், எல்லாவற்றையும் அறிவதால் சர்வக்ஞன் என்றும், ஓம்புதலால் ஓம் என்றும் கூறப்படுகின்றனன். பிள்ளைகள் நெடுங்கணக்குப்படித்துப், பின்னர் முதற்பாடம், இரண்டாம் பாடம் முதலிய ஏடுகள்படித்து, மெட்ரிக்குலேஷன்பரீக்ஷைக்குரியபாடங்கள் படித்துத் தேறிப், பின்னர் பி. ஏ. எம். ஏ. முதலிய

பரீக்ஷைகளுக்குப் படித்துத்தேறி ஆசிரியராதல் போல; வெவ்வேறு கீழ்ப்படி மதங்களைப்பற்றி அவ்வவற்றிற் பெறத்தக்க அறிவடைந்து பல ஜன்மங்களில் சித்தசுத்தியடைந்து சிவஞான மெய்தி முத்தி யடைவர்.

எம். ஏ. பரீக்ஷையிற் றேறுதற்கு ஒவ்வொரு வகுப்புப்பாடங் களும் எப்படித் தள்ளத்தகாத அத்யாவசியமும் பயன்படத் தக் கனவுமாகுமோ அப்படியே ஒவ்வொரு மதங்களாகிய சோபான மார்க்கங்களும் தள்ளத்தகாத பயனுடையனவேயாம். ஆதலால் கன்மபரிபாகத்தால் பலதிறப்பட்ட அநந்த கோடி ஜீவர்களுக்குப யோகமாம்படி உலகிற் பல்லாயிர மதங்க ளிருக்கப் பரமன் கற்பித் திருக்கின்றனன். ஆகாலால் ஒருமதமும் எள்ளத்தக்க தன்றென்று கருதி அறிவதே அறிஞர் முடிவு. சைவசித்தாந்தத்தின் உண்மைத் துணிவுமஃதே.

திரு. நா. தேவாரம்.

விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்.

சிவஞான சித்தியார்.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார் வந்தருள் புரிவர்.

சாந்தோக்கியம்.

(யதாயதோ உபாசதே ததைவபவதி) "எப்படி எப்படி யுபா சிக்கின்றனன் அப்படியே ஆகின்றனன்"

திருவாய்மொழி.

"தமருவந்த தெவ்வுருவவ் வுருவந் தானாய்த்
தமருவந்த தெப்பே ரப்பேர்—தமருவந்த
தெவ்வண்ணஞ் சிந்திப்ப தியையா திருப்பரேல்
அவ்வண்ண மகிழ்வோ னாம்"

என்ற சுருதிகளு மவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. ஆதலால் மதத்துவேஷங்களை யொழித்தல் நமது கடமையேயாம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எந்தத் தொழில் செய்யும்பொழு தும் பரமேசுரனைத் தியானித்தலும் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போலெண்ணி அவைகட்கு நன்மைபுரிதலும் தீமை செய்யாமையும்

சைவர்க்கு இன்றியமையாத செயல்களாம். படித்தவர்களும் பெரிய உத்தியோகமுஞ் செல்வமுமுடையவர்களுந்தாம் கடவுளை வணங்கலாம்; எளியவர்களுக்குப் போதுமான அவகாசமின்மையால் அவர் கடவுள் தியானஞ் செய்யமுடியாதென்றெண்ணற்க. மன உழைப்புடையரைக்காட்டிலும் தேக உழைப்புடைய வேலைக்காரருக்கு அவகாசமுண்டு. உதாரணமாக மூட்டைசுமப்பவன் என்பாவச்சுமை அஞ்ஞானச்சுமைகளையொழித்தருளவேண்டுமென்று தியானித்துக்கொண்டு செல்லலாம். அதனால் தெய்வபக்தியுண்டாவதோடுபாரந்தெரியாமையுமுண்டாம். மண்வெட்டுபவன் இவ்வாறு என் ஆணவம் தீயகன்மங்களை வெட்டி யொழிக்கவேண்டு மென்று தியானித்துக்கொண்டு வெட்டலாம். குப்பை தூர்க்கிறவன் இவ்வாறு என் பாசக்குப்பைகளை விலக்க வேண்டு மென்றும், கரிச்சட்டி கழுவுபவன் இவ்வாறு என் அஞ்ஞானக்கரியைக்கழுவ வேண்டு மென்றும் கடவுளைத் தியானிக்கலாம். மனஉழைப்புடையவன் அவன் தொழிலை நிறுத்தியொருதியானத்தில் மனதைச் செலுத்தவேண்டும். உடல் வேலை செய்பவன் வேலை செய்யும் பொழுதே மனதில் கடவுளைத்தியானிக்கலாம்.

திருநீறு.

திருநீறு கண்டி இரண்டும் சிவசின்னங்களென்னப்படுகின்றன. சர்வ பிரபஞ்சங்களையும் இறுதியில் சங்கரித்து எல்லாமொடுங்கிய காலத்தில் எஞ்சி நிற்பவன் சிவன் ஒருவனே.

ஆதலால் திருநீறு சர்வ சங்காரக் கடவுளை நினைப்பூட்டுகின்றது. திரிபுண்டரமாகத்திருநீறிடும்பொழுது மும்மலங்களையும் நீற்றி இவ்வாறு நீருக்கவேண்டு மென்று நினைந்து ஐந்தெழுத்தை ஓதி முறைப்படி திருநீறிடவேண்டும்.

திருநீறு மும்மலங்களையு மொழித்து ஆயுளும் செல்வமும் அறிவும் கொடுக்குந் தன்மையுடையது. வைத்திய முறையாய் நோக்கில் விபூதி உத்தூளநம் அவகுண்டநம் (நீர் கலந்து உடலிற் பூசல்) திரிபுண்டரம் என்ற காரணங்கள் உடம்பிற்படும், நோய்ச் சிற்றுயிர் தொற்றுநோய்ச் சிற்றுயிர்களையும் கொல்லும். உட்கொள்ளும் பூதி வாயினுட்சென்ற புழுக்களைக் கொல்லும். புழுக்களால் உண்டாம் நோய்கள் வாராமற்காக்கும். உதாரணமாக வித்துக்கள் புழுக்காமல் அல்லது உழுக்காமல் சாம்பல் சேர்த்து வைத்தலும், புழு அசுகணி உண்டாகிய அவரை, புடல், பீர்க்கு முதலிய படர் கொடிகளில் சாம்பல் தெளித்தலும் அவைநீங்கி நல்லபலன் றரலும் வாராமற் காத்தற்கும் வந்தபின் நீக்கற்கும் சான்றுகளாம்.

கண்டிகை.

ருத்திராக்ஷம் மகா உருத்திரனது கண் போன்றது. அவற்றை யணிந்து கொள்வது நம்பால் அவனருட்கண் பெறவேண்டு மென் பதைக் குறிக்கின்றது. கண்டியின் காரணத்தால் தேக சுகமும், நல்லறிவும், செல்வமும், சிவனருளுமுண்டாம். வைத்தியமுறையாக நோக்கில் கண்டியில் உயிர்ச் சாரசக்தி (Human Magnetism) உளதால் அதை அணிவார்க்கு உயிர்ச்சார சக்தி மிகுந்து தேகத்துக் கும் மூளைக்கும் பல மூண்டாகி ஆயுளும் நீளும். இரத்த சுத்தியும் நோய் நீக்கமும் உண்டாம். உதாரணமாகப் பல விடங்களில் மகம் மதியரும், கிறித்தவரும் கூடச் சில நோய்கள் வாராமற் காத்தற்கும் நீக்கற்கும் ருத்திராக்ஷத்தை ரக்ஷாபந்தனம் போலக் குழந்தை களுக்குக் கட்டி வருகின்றனர். நல்ல பலனையுமடைகின்றனர். வைத்தியர் ஜன்னி, நாவறட்சி, மயக்க முதலியவைகளுக்கு அதனால் கண்டாவிழ்தஞ் செய்து கொடுத்து நல்ல குணங் காண்கின்றனர்.

இவ்விரு காரணங்களுடையாரைக்காணுந்தோறும் அவற்றைத் தரிக்குந்தோறும் தெய்வ நினைப்புண்டாவதும் பாராட்டத் தக்கதே.

ஐந்தெழுத்து.

இச் சைவ சமயம் ஒரு ஜாதியார் அல்லது தேசத்தாருக்குரிய தன்று. மனித ஜாதியார் அனைவர்க்கும் பொது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் வகுப்புக்களைக் கருதினால் அவ்வுண்மை விளங்கும். கடவுளை அடையும் நன்னெறிகள் சிலர்க்குரியன வென்றும், சிலர்க்குரியனவன்றென்றும் கூறல் எவ்வள வறியாமை. கடவுட்குரிய அளவில் பெயர்களில் சிவன் என்பது எங்கும் நிறைந் தவன் என்று குறிக்கின்றது.

அது நெடுநாட் பலரால் தழுவப்படலாலும் தென்மொழி வடமொழி மறையாகமங்களிலும், வழக்கிலும் சிறந்து வழங்கப்படு கின்றது. பிற்காலத்து நமச்சிவாயன் என்ற பெயரும் வழங்கியது. அப்பெயர்களிரண்டும் ஐந்தெழுத்தென்றே கொள்ளப்படுகின்றன.

தேவாரம்.

"பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்"

"வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதனும நமச் சிவாயவே"

என்ற சுருதிகள் அக்கருத்தை விளக்குகின்றன.

திரு. நா. தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்

மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லராகின்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராயின்
அவர்கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே.

முண்டகோப நிஷத்.

"அபிவாயஸ் சண்டாளஸ் ஸிவஇதிவாசம் வதேத தேந
ஸகஸம் வதேத தெந ஸகஸம் வசேத தேநஸகபுஞ்ஜீத"

(இ-ள்.) சண்டாளனாயினும் சிவன் என்ற சொல்லைச் சொல்வானால் அவனோடு பேசுக. அவனோடு இருப்பாயாக. அவனோடு உண்பாயாக. என்றல் முதலிய சுருதிகள் விளக்குகின்றன.

இதுகாறுங் கூறியவாற்றால் சைவசமயம் தமிழ் நாட்டில் 12000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியுள தென்றும், அது எல்லாருக்கும் பொதுவாம் ஞானசமய மென்றும், உலகு உயிர் தெய்வம் என்று முப்பொருள்களுள. உயிர்கள் ஜாதிசமய வேற்றுமையின்றி அவர் புரியும் நன்மைதீமை உபாசனைகளுக்குரியபலனை அடைவர். நாம் கடவுளைநம்பிநன்னெறியிலொழுகி அவனை வழிபடல் வேண்டும். தன்னுயிர் போலெவ்வுயிரினிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். விபூதி, ருத்திராக்ஷதாரணம், பஞ்சாக்ஷர ஜெபம், ஜீவகாருண்யம் சைவத்துக்கு முக்கிய சாதனங்கள் என்றும் நன்கு விளங்குகின்றது.

சுந்தரர் தந்த மறுபெயர்கள்.

(முத்துப்பேட்டை போர்டு மிடில் ஸ்கூல் தமிழாசிரியர்,
வித்துவான், திரு, மு. இரத்தின தேசிகரவர்கள்.)

(92-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரர் தேவாரத்துள்ள இத்தகைய கடைக் காப்புச் செய்யுட்களில் காணப்பெறும் அவரது மறுபெயர்கள் பலவாகின்றன. அவற்றைத் திரட்டி ஓர் வகைப்படுத்தின், அவை சுந்தரர்சரிதத்தின் பல பகுதிகளைத் தெள்ளிதிற் புலப்படுத்தும் அகச் சான்றுகளாகின்றன. சுந்தரரது சரிதத்தின் பல நுட்பங்களையும், அவரைப் பற்றிக் கூறியுள்ள வேறு நூல்களின் புறச் சான்றுகளைக் கொண்டு நிறுவுவதைவிட, அவரே கூறியுள்ள அகச் சான்றுகளைக் கொண்டு நிறுவுதல் சாலப் பொருத்த முடைத்தாம். எங்ஙனமெனின், அவரது சரிதத்தைக் கற்றோரும் கேட்டோரும் தாம்செய்யும் நூல்களில்பல காரணங்களால், உள்ளதை மாற்றியும், இல்லாததைப்பெய்தும் கூற

நேரிடும். ஆயின்சைவ சமயத்திற்கே ஓர் வழிகாட்டியாகத்தோன்றி, சைவசமயத்தின் உண்மைகளை வெளிப்படுத்திய சுந்தரர் சரிதத்தைக் கூறுமிடத்து, உண்மைக்கு மாறுபட்டனவற்றைக் கூறுரென்பது திண்ணம். ஆதலின் அவர் தனக்கிட்ட மறுபெயர்களைப் பின் வருமாறு ஓர் முறைப்படுத்துவாம்.

1. மறையார் தங்குரிசில்; நான் மறையங்கம் ஓதிய நாவன்; அருங்குலத் தருள் தமிழ் ஊரன்.

2. சடையனவன் சிறுவன்; நன்சடையன் இசைஞானி சிறுவன்; சடையன் இசைஞானி காதலன்; சடையன் சிறுவன்.

3. நாவலூரன்; திருநாவலூரன்; நாவலாரூரன்; பொன்னலங்கல் நன்மாடப் பொழிலணி நாவலாரூரன்.

4. தென்னுவலர்கோன்; வளர் நாவலர்கோன்; நாவலூர் மன்னன்; நாவலூர்க்கோன்; நாவலூர் வேந்தன்.

5. மல்லின் மல்கு திரள் தோளூரன்; கூடலர் மன்னன்.

6. அல்லியந் தாமரைத்தா ராரூரன்.

7. நம்பியூரன்; ஆரூரன்; பத்தனூரன்; புகழூரன்; மெய்ப்பத்தனூரன்.

8. சிவதொண்டன்; ஆரூரன்தொண்டன்; அடியீர்ன்; அடித்தொண்டன்; ஆரூரன் அடிநாய்; அம்மான்தன் திருப்பேர்கொண்ட தொண்டன்.

9. தொண்டர் தொண்டன்; அடியாரடியன்; சித்தர் சித்தம் வைத்த புகழ் சிறுவன்.

10. வன்றொண்டன்; அணுக்கவன்றொண்டன்.

11. ஆரூரன் பேர் முடிவைத்த மன்னுபுலவன்; செஞ்சொல் நாவன்.

12. வனப்பகையப்பன்; ஆயின சீர்ப்பகை ஞானியப்பன்; சிங்கடியப்பன்; இலையார் வாணுதலாள் நல்ல சிங்கடியப்பன்; வனப்பகையவளப்பன்; மைம்மாந் தடங்கண் மதுரமன்ன மொழியாள் மடச்சிங்கடி தம்மான்.

1. மறையார் தங்குரிசில்; நான்மறை யங்கம் ஓதியநாவன்; அருங்குலத்தருள் தமிழ் ஊரன்.

மேற்கூறிய பெயர்கள் பலவற்றுள்ளும், மறையார் தங்குரிசில், முதலிய இத் தொடர்கள் மூன்றும் சுந்தரர் மறையவர் வருணத்தில்

தோன்றியதைக் குறிக்கின்றன. சுந்தரர் மறையவர் குலத்தில் தோன்றியதோடமையாது சிவனருள் கைவரப்பெற்றூராதலால், அவர் தன்னை 'மறையார் தங்குரிசில்' என்று சிறப்பித்துக் கொண்டார். 'தோன்ருதோற்றித் துறைபல முடிப்பினும், தான் தற்புகழ்தல் தகுதியன்று' ஆயினும், சுந்தரர் சாதாரண மனிதரின் எல்லையைக் கடந்து, முத்திக்கு வித்தாய்த் திகழ்ந்து விளங்கிய பத்தராதலின் அவர் தன்னை எவ்வாறு கூறிக்கொள்ளினும் சிறந்ததே யாம்.

"பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

அன்றியும் சுந்தரர் தன்னை இவ்வாறு உயர்வுபடுத்திக்கொள்ளு வதோடமையாது 'அடியான்' 'ஆரூரன் அடிநாய்' 'தொண்டர் தொண்டன்' 'அடியாரடியன்' என்று தாழ்த்திக் கூறிக்கொள்ளு வதையும் ஒப்புநோக்கும்போது, அவரது நடுநிலை நன்கு புலப்படு கின்றது. தான் மறையவர் குலத்தில் தோன்றியவராதலால், தன் குலத்தொழிலாகிய வேதாங்கங்களை ஓதுதலையேற்கொண்டிருந்தார். எனவே தன்னை 'நான்மறையங்கம் ஓதியநாவன்' என்று கூறிக் கொண்டார். வேதம் எழுதாக்கிளவி என்ற பெயர் பூண்டு கர்ண பரம்பரையாக, ஆசிரியன் ஒருவனுக்கோத அவன் தன் மாணவ னுக்குச் சொல்ல நாவின் தொழிலால் நடைபெற்று வந்ததாதலின் 'ஓதிய சீரவன்' என்று கூறிக்கொண்டார்.

"ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப்பாடி"

என்ற திருமுருகாற்றுப்படை அடிகள் ஈண்டு ஒப்புநோக்கற் பாலன. அந்தணர், அரசர், வணிகர், வேளாள ரென்ற குலங்கள் நான்கனுள்ளும், அந்தணர்குலம் தலையானதாதலின் 'அருங்குலத் தருள் தமிழ் ஊரன்' என்று தன்னைக் கூறிக்கொண்டார். வட மொழியிலுள்ள வேதாங்கங்களை ஓதியதோடமையாது தமிழையும் நன்கு பயின்றிருந்தமையால் 'தமிழ்ஊரன்' என்றும் கூறிக்கொண் டார் சுந்தரர் இவ்வாறு தன்னை மறையவரென்று பொதுப்படக் கூறிச் செல்லினும் அவர் ஆலயங்களில் கடவுளை அருச்சிக்கின்ற ஆதி சைவ மரபைச் சார்ந்தவரென்பது,

"மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமைசெய்யும்
வேதியர் குலத்திற் றோன்றி மேம்படு சடையனாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்பாற்
றீதகன் றுலகமுய்யத் திருவவ தாரஞ் செய்தார்."

"தந்தையார் சடையனார்தந் தனித்திரு மகற்குச் சைவ
வந்தணர் குலத்துத்தங்க ளரும்பெரு மரபுக்கேற்ப
வந்ததொல் சிறப்பிற்புத்தூர்ச் சடங்கவி மறையோன்றன்பாற்
செந்திரு வனையகன்னி மணத்திறஞ் செப்பிவிட்டார்".

என்ற பெரிய புராணச் செய்யுட்களால் விளக்கமுறுகின்றது.

2. சடையனவன் சிறுவன்; நன்சடையன் இசைஞானி சிறுவன்; சடையன் இசைஞானி காதலன்; சடையன் சிறுவன்.

'சடையனவன் சிறுவன்', முதலான தொடர்களால், சுந்தரர் தன் தாய்தந்தையர்களின் பெயர்களைப் புலப்படுத்துகின்றார். 'சடையனவன் சிறுவன்' 'சடையன் சிறுவன்' என்ற தொடர்களால் அவருடைய தந்தையார் பெயர் சடையனு ரென்பது புலப்படுகின்றது. 'நன்சடையன் இசைஞானி சிறுவன்' சடையன் இசைஞானி காதலன், என்ற தொடர்களால் சுந்தரர்தம் தந்தையார் பெயரும், தாயார்பெயர் இசைஞானி என்பதும் புலனாகின்றது. தாய்தந்தையரின் பெயர்களைக்கூறி, ஈற்றில் தன்னைச் 'சிறுவன்' என்றுகூறிக் கொள்வதை நோக்கும்போது அவரது பெற்றோருக்குக்கீழ்ப்படியும் தன்மையும், தாய்தந்தையரிடத்து வைத்த பெருமதிப்பும் புலனாகின்றது. 'சடையன் இசைஞானி காதலன்' என்ற தொடரை நோக்கும் போது, இவருக்கும் தாய்தந்தையருக்கும் ஏற்பட்ட அன்பின் பெருக்குப் புலனாகின்றது. (தொடரும்)

கந்தபுராணம்.

அமரர் சிறைபுகுபடலம் 125 வது செய்யுளின் தெளிவுரை.

(சின்னக்காஞ்சிபுரம் திரு, சேனாபதி நடேச செட்டியாரவர்கள்.)

எம்பிரான் நின்னைமுக்கண் எந்தையை வணங்கநேரில்
தம்பெரும் வடிவம்காணச் சாருவர் ஒழிந்தகாலை
உம்பர்கோன் முதலோர்தத்தம் உருக்கரந்துஉழல்வர் வான்மேல்
வெம்பணிச் சிலைகள் மாறும் வெய்யவர் நிலைமையேபோல்.

இதன் அன்வயம்:—எம்பிரானே! நின்னை(யும்) (நுந்தையாம்) எந்தை முக்கண்ணனையும், நேரில் வணங்க உம்பர்கோன் முதலோர் தம் (தேவவடிவாம்) பெரும்வடிவம்காணச்சாருவர்; (ஆனால்) ஒழிந்த காலை வெஞ்சிலை பணிகள் (ஏற்று) வான்மேல் தத்தம் உருக்கரந்தும் காணச் (செய்தும்) உழலும் (அவுணராம்) வெய்யவர் நிலைமையே போல் உம்பர்கோன் முதலோர் (அவுணர்க்கு) மாறும் (நிலையில்) தத்தம் உருக் கரந்து உழல்வர் என்பது.

இதன் தெளிவுரை.

பேருருவம் காணச் சாருவர்:— உம்பர்கோன் முதலோர் மூந்நான்கு கண்ணனும் முருகப்பெருமானையும், எமது தந்தையாம் முக்கணன் இறைவனையும், இடையறாது போற்றிப் பணியும் புண்ணினரான தேவர்கள் தத்தம் தேவவடிவம் யாவரும் காணும்படி நேரில் கண்டு தம் குறைகளைச் சொல்லி வணங்கக்கயிலைக்குச் செல்வார்கள். அதுவேபோல், வெஞ்சிலை ஏற்ற வெய்யராம் அவுணர்களும் தாம் அன்று அன்று ஆற்றிய பணிகளைத் தம் அவுணர் தலைவர்களுக்குச் சொல்லச் செல்கையில் தத்தம் அவுணவடிவாம் பெரும்வடிவம் யாவரும் காணச் செல்வர்.

ஆனால் இவ்விரு தொகையினரும் பெரும்பகையின் வழி நின்றனராதலால் தத்தம் தலைவர்களிடத்து வணங்கி முறையிடவும் (ஒருசாரார்) தாம் ஆற்றியபணி (கட்டளையின்) முடிபைச் சொல்லி மேலும் செய்யும் பணியை ஏற்கச் செல்லும் காலம் நீங்கலாக ஒழிந்த மற்றக் காலங்களில்வல்லவுணர்கள் எளியதேவர்களைப்பற்றிச் சிறை புகுவிப்பான் ஏற்ற கட்டளையை நிறைவேற்றத் தத்தம் உருக் கரந்தும், காணச் செய்தும் வானிலும் மண்மேலும் மாறி மாறி வேண்டும் உருக்கொண்டு கண்ணும் கருத்துமாக உழல்வர்.

மாறும் நிலை:— ஆனால் உம்பர்கோன் முதலோரும் உருவு மாறித் திரிகரும் அவுணர்தம் கட்புலனுக்கும் அவர்தம் கையில் ஏந்திய வெய்யவில்லின் வழிவரும் கொடிய பாணங்களுக்கு அஞ்சியும் தம் நிலைதடுமாறும் விதியை நொந்தும், அவுணர்கள் உழலும் நிலைமையே போல் தேவர்களும் தத்தம் உருவங் கரந்து யாவரும் காணாதவாறு வானிலும் மண்ணிலுமாக மாறி மாறி உழல்வர்...... என்பது.

தேவர்கள் இப்படி உருக்கரந்து உழலும் தொழிலினராய் அவுணர்க்கு மாறும்நிலையில் அஞ்சி, அல்லல்பட்டு தம்நிலை தடுமாறி உழலும் செய்தியை தேவர்கள் குருவாம் பிரகஸ்பதி முருகப் பெருமானிடத்து முறையிட்டு அவுணர்தம் நல்வலம் அடக்கி அருள்புரிய வேண்டும் கருத்தைக் கொண்டது இச்செய்யுள்.

வானவரும் தானவரும் மாயையின் புதல்வர்களாதலால் தத்தம் உருக்கரந்தும் காணச் செய்தும் செல்லும் திறத்தர், ஒழியாப் பகையினர் என்பதையும் இச்செய்யுள் அறிவிக்கும்.

ஒரு செய்யுளின் உரை விளக்கும் முறை:— செய்யுள் தந்தாரின் கருத்தமைவு யாதென்று அறியாது பொருள்விளக்குவது சீரியதாகாது. தாம் கொண்ட கருத்தை ஒளித்து வைத்து எளிதில் விளங்காதவாறு அமைப்பது சிறந்த அறிவுமிக்க நல்லிசைப் புலவர்

களின் திறமாகும். அப்படி அமைத்த செய்யுளின் உள்ளுறைப் பொருளை அறியும் வகையை இலக்கணம் தொகுத்த ஆசிரியர்கள் தொல்காப்பியனாரும், பவணந்தியாரும் கீழ்க்கண்டசூத்திரங்களைத் தந்துள்ளார்கள்.

தொல்காப்பியம்; பொருள் அதிகாரம்; செய்யுளியல்; 522/211

1. "அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

இதன் அன்வயம்:— பாட்டின் பொருள் (தரும் மொழிகள் செய்யுளில்) அகன்றுகிடப்பினும் அணுகியநிலையில் (கொணர்ந்தும்) (செய்யுளைத்) தந்தனர் (கொண்ட) பொருளை வழக்கியலில் இயன்று உணர்த்தலை மாட்டு எனமொழிப (புலவர்).

பாட்டியல் வழக்கின் என்பதை, பாட்டின் வழக்கியல் என்று மொழிமாற்றுக. (செய்யுளியல் வழக்கியல்).

தொல்; பொருள்; செய்யுளியல். 518/207.

2. "சொல்லொடும் குறிப்பொடு முடிவுகொள் இயற்கை
புல்லியகிளவி எச்சமாகும்".

இதன் அன்வயம்:— (கருத்தாவைக் குறிக்கும்) குறிப்பு (வினைமுற்று)ச் சொல்லொடும் இயற்கையொடு புல்லிய (எச்சக்) கிளவியை (கொண்டு கூட்டுவது) எச்சங்கொள் முடிவு ஆகும் என்பது.

இதனை, பவணந்தியார் நன்னூலகத்து, கொண்டு கூட்டுப் பொருள்கோள் என்பர்.

"யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே" என்றதால் அறிக.

இச் செய்யுளின் பொருள் இவ்வாறு இருக்க கந்தபுராணஉரையாசிரியர் ஒருவகையாயும், செந்தமிழ்ப் பத்திரிகை 24ம் தொகுதி 172ம் பக்கத்தில் "ஐயம்" என்ற மகுடத்திற்குத் தெளிவுரை தந்த பெரியார் வேறோர் உரை விளக்கியும், இவ்விரு உரைகளையும் உற்று நோக்கிய தமிழ்ப்பேரறிஞர், திருவாளர், காஞ்சிபுரம் திரு, வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள், ஈழகேசரியில் தொகுதி 5 பகுதி 21, 25-11-1934லும் சிவநேசனில் யுவவருஷ ஐப்பசிமீ˚ த்திய வெளியீட்டிலும் ஒரு சிறந்த உரை விளக்கியுள்ளார்கள். இவ்வுரையைக் கண்ணுறும் கல்விமான்கள் குணம்கொண்டு குற்றம் கடிந்து தங் கருத்தை விளக்கித்தருவார்களாக.

உ

வில்லிபுத்தூராரும் சிவபெருமானும்.

(அசீகூர் திரு, A. S. முத்தையாத்தேவர் அவர்கள்.)

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவ்வாசிரியர் தவநிலைச் சருக்கத்து ௧௧ம் செய்யுளிலே அருச்சுனன் கைலையைக் கண்டமையைக் கூறுகின்றார். அதுபோது 'எம்பிரானிமவான்றந்த - புரிகுழலோடும் வைகும் புண்ணியப் பொருப்பைச் சேர்ந்தான்' என்று கூறுகின்றார். இவ்விடத்தில் ஆழ்வாரது உள்ளத்து கனிந்து எழுந்துள்ள பேரன்பு தெளிவாம். எவ்வாறெனின்? மதங்கொண்டார் மயங்காவண்ணம், சிறிதேனும் ஐயமின்றி, ஆழ்ந்த தமது அன்பு வெளிப்பட, எம்பிரான் என்று கூறியுள்ளார். இச்சொன்னோக்கைக் கற்றோர் கண்டு களியாதிரார்.

இஃதன்றியும், ௧௧௦-ம் பாடலில் நமக்குப் புலப்படுவதை இங்குக் காண்பாம். தவம் புரிவோனின் தவங் கண்டு அருளைப் புரிவோன், அத்த வசியோடு மல்லமர் புரியுந்தன்மையைக் கூற வந்தவர் "வன்னல் எனையாளுடையமாதவனும் மாதவனும்மல்லமர் தொடங்கியுறவே' என்று கூறியுள்ளார். இங்கு ஆழ்வார் எனையாளுடைய மாதவன் என்றதினால் அவரது உளத்தெழுந்த சிவபக்தி விளக்கமாம்.

அடியில் வரும் பாடல்களில், சிவபெருமானது குணங்களையும் செயல்களையும் உள்ள அளவிலேயே வேறுபாடின்றி ஆழ்வார் விரித்து விளக்குவதை அறியலாம்.

"போகமாய் விரிந்தும் போகியாய்ப் பரந்தும் புலன்களின்வழி மனஞ் செலுத்தா - யோகியாயிருந்தும் யோகிகண்முதலா உரைப்பரும் பலபொருளாயும் - ஏகமாய் நின்றும் தத்துவ மறைக்கும் எட்டுதற்கரிய தன்வடிவிற் - பாகமாய் விளங்கும் பைந்தொடியுடனே பரிவுடன் சின்மொழிபகர்வான்" "பையராவணி மணிப்பவள மேனியாய் - செய்யவாய் மரகதச்செல்வி பாகனே - ஐயனே சேவடி யடைந்தவர்க்கெலாம் - மெய்யனே எங்குமாய் விளங்குஞ் சோதியே" "தழுவினன் பெருந்துயரகற்றித் தண்ணளி - பொழிதரு கண்ணினன் புரக்குஞ் சிந்தையன்-அழிவற வொழிவற அமர்ந்த சோதியன் - பழுதறு மொழிசில பகர்ந்து தேற்றினான்" என கூறப்பட்டிருப்பதால் ஆழ்வாரது பெரும்புலமையின் தெளிவும் அவரது நிலைமையும் தெளிவாம். எங்ஙனமெனின்? "ஏகமாய் நின்றும் தத்துவ மறைக்கும் எட்டுதற்கரிய தன்வடிவில்" என்பதாலும், "ஐயனே சேவடி அடைந்தவர்க்கெலா - மெய்யனே எங்குமாய் விளங்குஞ் சோதியே" என்பதாலும், "அழிவற வொழிவற அமர்ந்த சோதியன்" என்பதாலும், அவரதுஉள்ளம் சிவன்பால் கிடக்கை விளக்கமாம்.

நிவாத கவசர் காலகேயச் சருக்கத்தில் "ஆழிநீரழுவத் தென்றும் உறைபவர் ஆழியானும் - ஊழியினுதன்றுனும்" என்று வியந்து கூறுவது மிக்க வியக்குந் தன்மையது. அன்றியும், அஃது எக்காலத்தும் அழிவிலான் சிவபெருமான் என்பதையும் உணர்த்தா நின்றது. தவிரவும், புஷ்பயாத்திரைச் சருக்கத்து க0-ம் பிரட்டில் காமியவனத்தைநீங்கி அடுத்தவனத்தை அடையும்பொழுது "இந்த வனம் தனக்கு எமையாளுடையான் குன்ற மீரைம்பதி யோசனை யென்றெடுத்துக்காட்டி." என்று ஆழ்வார் கூறுமிடத்து, எமையாளுடையான் குன்றம் என்று கூறி இருப்பது, அவர் சிவபெருமானிடத்துக் கொண்டுள்ள பேரன்பை வெளிப்படுக்கும்.

முதற்போர்ச் சருக்கத்துக் காப்புச் செய்யுளிலே "மேவரு ஞானனந்த வெள்ளமாய் விதித்தோனுகி - மூவருமாகி யந்த மூவர்க்கு முதல்வனுகி-யாவருமாவுமாகி யிறைஞ்சுவா ரிறைஞ்சப் பற்பல - தேவருமாகி நின்ற செங்கண்மால் எங்கள் கோவே" என்று வழிபடு தெய்வ வணக்கங் கூறவந்த விடத்து, பொருந்து தற்கரிதாகிய ஞான ஆனந்தப் பெருக்காகியும், பிர்ம, விஷ்ணு, ருத்திரர்களான மூவராகியும், அத்தன்மையினையுடைய மூவருக்கும் முதன்மை பெற்றோனுகியும், எல்லா உயர்திணைப் பொருள்களாகியும், அஃறிணைப் பொருள்களாகியும், துதிப்போர் துதித்துக்கொண்டிருக்க, பலவகைப்பட்ட தேவர்களுமாகி நிலைபெற்ற செங்கண்மால் என்ற எங்களது தலைவன் தலைவனுவான் என்று பொருள்படும்படி கூறியுள்ளார். அதில் அந்த மூவர்க்கு முதல்வனுகி என்று கூறுமிடத்து, சிவபெருமானைக் குறித்தே கூறுகின்றார். அஃதென்னவெனின்? படைக்குங் கடவுளையும், காக்குங் கடவுளையும், அழிக்குங் கடவுளையும் விதித்தோனுகி மூவரும் என்று கூறிவிட்டார். பிறகு அந்த மூவர்க்கும் என்று உம்மை விரித்துக் கூறியது, அம்மூவர்க்குந் தலைவனுய ஈசனுகிய தன்மையை, இவை யெல்லாம் அடங்க, செங்கண்மால் எங்கள் கோவே என்றார். பதின்மூன்றும் போர்ச் சருக்கத்தில் "மருவரு கானக மலரினுமெலைப் - பொருவரு பூசனை புரிதியையநீ-யிருவருமொருவரே யென்பதின்றுபோ - யருவரை யவனடி யடைந்து காண்டியே" என்கிறார். அதில் இருவரும் ஒருவரே என்று கண்ணபிரான் கூறுவதாகக் கூறுவதையும், அந்தமூவர்க்கு முதல்வனுகி என்ற துதியையும் ஆராய்ந்துணர் வார்க்கு எல்லாமாகி நின்றுன் ஒருவன் என்பதும், ஆழ்வார் தெய்

வத் தூடணை அற்றவர் என்பதும் சிவபெருமான்மீது அன்புமிக் குடையார் என்பதும் இனிது விளங்கும்.

பதினான்காம் போர்ச் சருக்கக் காப்புச் செய்யுளில் சிவபெருமானது அரும்பெருஞ் செயல்களை விளக்கி இருத்தலை நன்கு காண்பாம். "அரிய தண்கலை வாண்மதியமுங் கொதிகொள் ஆலமுந்தன திடத் தடக்கி - உரிய வொண் கங்காநதிக்கொரு பதியாயுரை பெறு முயர் மகோததியிற் - பரிய திண்சிலையோடு ஆம்பெலா முகந்து பற்குனப் பொருப்பிடைப் பொழியுங்-கரியபைம்புயலைக் கைதொழு மவர் கருவிலே திருவுடையவரே" இந்தப்பாடலில், சாபம் பெற்று கலைந்து வருந்தி தன்னைவந்தடைந்த சந்திரனைக்காத்தமையும், யாவராலும் உண்ணப்பெறாத கொடியநஞ்சை உண்டு யாவரையுங்காத்தமையும், அன்றியும் அதனைக் கண்டத்தில் விளங்கச் செய்தமையும், நில்லாதநீரைமுடிமேல் தாங்கினமையும் இவைபோன்றசிறந்த காரணங்களால் அருஞ்செயல்களைக்கூறி சிவபெருமானைப்பெருங்கடல்என்று உருவகஞ் செய்துளார். இங்குச் "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலாதார்" என்ற தேவரது திருவாக்கிற்கு இலக்கியமாக ஆழ்வார் கூறி யிருத்தல் கண்டு மகிழற்பாலதேயாம்.

பதினெட்டாம் போரிலே இறக்குந் தருவாயிலுள்ள துரியோதனனை எய்தின அசுவத்தாமா, சேனைபதிப்பட்டத்தை இப்போதாவது நீ எனக்குக் கொடு, நான் உனது பகைவர்களாகிய பாண்டவர்களின் தலைகளை உன் முன்னர்க் கொண்டு வந்து வைக்கின்றேனென்றான். அதைக் கேட்ட துரியோதனன் கொடுத்தேன் என்றான். அவ்வளவில் சென்ற அசுவத்தாமா பாசறையில் காவல் கொண்ட பூதத்தோடு சண்டையிட்டுத் தோற்றான். பிறகு அவன் சிவனை நோக்கித் தவஞ்செய்து ஓர் வாளைப்பெற்றானென்ற விடத்து "எண்ணியகருமம் முடியினும் முடியாதொழியினும் ஈசனைத்தொழுதல் - புண்ணியம் எனுமாறு உன்னி" என்று ஆழ்வார் கூறுகின்றார். இங்குச் சிவபெருமானைத் தொழுவார், எய்தும் பயன் வலியுறுத்திக் கூறப்படுகின்றது. எதனாலெனின்? ஈசனைத் தொழுவது அஞ்செழுத்தால் என்றும், அதனால் புண்ணியம் வந்து எய்தும் என்றும் கூறுகின்றார். அஃது எண்ணிய கருமம் முடியினு முடியா

தொழியினும் என்றமையானே, சிவபெருமானை மந்திரத்தால் துதித்தல், இம்மைப் பயனைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் துதித்தார்க்கு மறுமையில் பயனுடைத்து என்பது இதனால் பெறப்பட்டது.

மேலும் "அன்றவன் மறையின் முறையினாற் புரிந்த வருச்சனை யுவந்தருளி - நின்றனன் விழியும் இதயமும் களிப்ப நீறுடையே றுடைக் கடவுள்" என்றார். மேற் கூறிய விதியானே துதிக்க, முன் வந்த கடவுள் திருநீற்றை யுடையவனும், காளைவாகனத்தை உடையவனுமாகி, கண்களும் களிப்ப இதயமும் களிப்ப நின்றான் என்று கூறுகின்றார். இங்கு, சிவபெருமான் இரக்கத்தன்மை யுடையவர் என்பதையும், திருநீற்றை வரைந்த அங்கத்தை யுடையார் என்பதையும், சிறந்த ஆனேற்றை வாகனமாகக் கொண்டவர் என்பதையும் விளக்கியதோடு கடவுள் என்று மிகுத்து ஏற்றங் கூறியுள்ளதையும் பெரியோர் கண்டு களிப்பெய்துவாராக!

இவ்வெடுத்துக் காட்டுக்களால்நமக்கு விளங்குவதுயாதெனின்? ஆழ்வார் பாயிரத்திலே கூறிய "முன்னுமா மறை முனிவனும் தேவரும் பிறரும்" என்ற யாப்பில் "மன்னுமாதவன் சரிதமும் இடை இடை வழங்கு-மென்னு மாசையால் யானு மீது இயம்புதற் கிசைந்தேன்" என்ற விடத்து இடைஇடை என்றது சிவபெருமான் மீது ஆழ்வார்கொண்டுள்ள பேரன்பினால் இவ்வாறு கூறினார் என்பது தெற்றெனத் தெளிதலேயாம். அகச் சான்றாக தவநிலைச் சருக்கத்து 'உள்ளடி விரற்றலைகள்' என்ற தொடக்கத்தையுடைய தூக்கிலே 'வள்ளலெனையாளுடைய மாதவனும் மாதவனும்' என்ற விடத்து, அத்தொடர் எந்தப்பொருளைக் கொடுக்கின்றதோ, அந்தப் பொருளையே அச்செய்யுளினிடத்தும் காண்பதே நன்றாம். அவ்வாறு கொள்ளுவது ஆழ்வாரது அன்புக்கும் யாப்பின் பொருட்கும் மாறாகா தென்பது வெளியாம்.

ஆகையால், அறிஞர்களே! இதுகாறு கூறிவந்தமையால், ஆழ்வார் சிவபெருமான்மீது அன்புமிக்குள்ளார் என்பதையும், இடை இடை என்ற தொடர் சிவனையன்றி மற்றாரையும் குறிக்காது என்பதையும் விளக்குதல் காண்க.

கந்தபுராணம் கயமுக னுற்பத்திப் படலம்.

162-ம் செய்யுளுரை.

(யாழ்ப்பாணம், சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் அவர்கள்)

என்னலு முமையவ ளிசைவு கோடலு
மன்னதொ ரெல்லையி னரியை நோக்கியே
தன்னிக ரில்லவ னிதற்குச் சான்றென
மன்னினை யிருத்தி யான் மாயனீ யென்றுன்.

(இ-ள்.) என்றருளிச் செய்ய தேவியார் அதற்கு உடன்படுதலும் அக்கணம் விஷ்ணு மூர்த்தியைப் பார்த்துத் தனக்கு நிகரில்லாத சிவபிரான் மாயனே நீ இதற்குச் சாட்சியாகப் பொருந்தி இருக்தி என்றருளிச் செய்தனர் என்பதாம்.

இசைவுகோடலும் - உமையம்மையார் ஆன்மாக்களைப் பெற்ற மாதாவாதலால் ஆன்மாக்களது கன்மங்கள் நீங்கவேண்டுமென்னும் விருப்பாயே யிருப்பார். அங்ஙனம் விருப்பாயே யிருத்தலால் இப்பொழுது சிவபெருமான் அவ்வான்மாக்களது கன்மங்கள் நீங்குங் காரணமாய இந்த லீலையைச் செய்து மெனவே அதற்கு உடன்பட்டாரென்க. தன்னிகரில்லவ னென்ற விதப்பினுலே உலகத்தோர் செய்யும் பஞ்ச பாதகத்தைச் செய்தாரென்றால் அத்தொழிலைச் செய்யாத யோக்கியர்களும் உளராவர். ஆகையால் இச்செய்கை இவர்க்கு மேலோராய்ப்பிற செயலாய்த் தாழ்ந்திருப்பின் ஒக்தோரென்றும்எண்ணப்படுவார்எனப்பெறப்படுமென்றன்றே? நுண்ணறிவுடைய ஆசிரியர் அப்பஞ்ச பாதகத்துளொன்ருய சூதாட்டத்தைச் செய்தாரல்ல ரென்பது போதர தன்னிகரில்லவனென்றுர். விஷ்ணுவுக்கு அரி, மாதவனென்றற் றொடக்கத்துப் பிறநாமங்களொன்றைக் கூருது மாயனென்று கூறினுர். அவ்விஷ்ணு மரத்துக்கழாப்புப் போற் சிவத்தோடபின்னமாயிருக்கும் அருட்சத்திபோலச் சிவத்துக்குத் தாமும் வீரசத்தியென்றும் அவ்வருட்சத்திக்கும் தம்மின் மேம்பட்டிருப்பதென்னை? தாமும் அச்சத்தியும் சமத்துவ மென்றீங் கருதி அகந்தை கொண்டு மயங்கிய மயக்கமுடையராதலாலென்க.

இந்த அகந்தையை நீக்குதற்கே சாட்சியாயிருக்கக் கடவையென்றுர் போலும்.

மதிப்புரை மஞ்சரி.

ஸ்வயம்ப்ரகாச விஜயம்:— சேலம் ஜில்லா நாமக்கல் தாலுகா சேந்தமங்கலம் ஸ்ரீ தத்தகிரி குகாலயத்தில் அமர்ந்தருளும் உயர் திரு, ஸ்வயம்ப்ரகாசப் பிரமேந்திர சரஸ்வதி சுவாமி அவர்களின் வரலாறும், சுவாமிகள் திருவாய்மலர்ந்து அருளிய அரிய உபந்நியாசங்களும், பிறவும் சென்னை 'பாலவிநோதினி' பத்திரிகாசிரியர் வரகவி திரு. அ. சுப்பிரமண்ய பாரதியார் அவர்களால் தமிழில் பிழையற எழுதிப் பதித்து; சுவாமிகளின் சீடராகிய ஸ்ரீ தூரியானந்த சுவாமிகளால் வெளியிடப்பெற்றது. மக்கட்கு உறுதிபயக்கும் நீதிகள் பலவும், உயரியகருத்துக்களும், துறவறத்தின்பெருமையும், தெய்வமூர்த்த தத்துவார்த்தங்களும், பரத்துவ உண்மையும், சுவாமிகளின் மன உறுதி ஆதிய மாண்பும் நன்கு விளக்கப்பெற்றுள்ள இந்நூல் படிப்போர் ஒவ்வொருவரையும் நன்னெறிக்கட் செலுத்துவதாக இருக்கின்றது. இதில் சுவாமிகள், சுவாமிகளின் குருமூர்த்தி, சுவாமிகளின் சீடர் ஆகிய இவர்களின் ஞானயோக நிலையுடன் கூடிய திருவுருவச் சித்திரங்களும்; ஸ்ரீ நடராஜ மூர்த்தி, தத்தாத்திரேயர், தத்தகிரி ஆகிய திருவுருவச் சித்திரங்களும் அழகுற மிளிர்கின்றன. திடஞானியாக விளங்கும் மகானைத் தெரிசித்தலும் அவர்களின் திவ்யப்ரபாவத்தை, உபதேச மொழிகளைத் தெளிவிக்கும் நூலைப்படித்து நுண்பொருளுணர்தலும் பெறத்தகும் பெரும் பேறேயாம். இப்புத்தகம் உண்மைக் கொள்கையுள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத சாதனமாயிருத்தலின் இதனை யாவரும் படித்துப் பயனுறலாம். கிரௌவுன் ஒன்றுக்குப்பதினாறு வெள்ளைக் கிளேஸ் ஐநூற்றறுபது பக்கங்களைக் கொண்டு, கெட்டிக் கட்டடமாக உள்ளது. இதன் விலை ரூ 2—8—0. வேண்டுவோர் சென்னை பெரம்பூர் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கம்பெனியிலும், திருவல்லிக்கேணி பி. டி. பாணி அண்டு கம்பெனியிலும், திருவல்லிக்கேணி 26 சுபத்திராள்தெரு விசாக விஷயத்திலும் பெறலாம்.

சிவஞானபோதம்:— ஸ்ரீ மெய்கண்ட தேவர் அருளிய பன்னிரண்டு சூத்திரங்களை உடைய இத்தமிழ் நூற்கு அவர்களும் ஸ்ரீசிவஞான சுவாமிகள் முதலிய இன்னும் பல பெரியோர்களும் விரிவான உரைகள் எழுதிப்போந்தனர். யாவரும் எளிதிற் படித்து உணரும்படியாகச் சூத்திரங்களின் சாரத்தை அதனதன் தலைக் குறிப்புகளுடனும், சூத்திரங்களின் பொருள், இலக்கணக் குறிப்பு, கருத்துரைமுதலியவைகளுடனும், சுருக்கியும், விளக்கியும், வரலாறு சேர்த்தும் திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடி நீதிமன்ற வழக்கறிஞரும், சிறந்த தேசாபிமானத் தலைவரும், சைவ சீலருமாக விளங்

கும் திருவாளர், வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் எழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். நீக்கமற நின்று இலங்கும் தலைவனைத் துணைக்கொண்டு யான் எனது என்னும் செருக்கு அகன்று, யாவும் சிவமயமாக உணரும் தன்மைக்கு ஏதுவாய் உள்ள இச் சிறந்த மௌன ஞான நூலை இலகுவில் அறியும் வண்ணம் உரை எழுதி வெளியிட்டுள்ள உயர்திரு, பிள்ளையவர்களைப் பாராட்டவும், அன்பர்கள் ஒவ்வொருவரும் இதனைப் பெற்றுப் படித்துப்பெரும்பயன் உறவும் வேண்டும். வேண்டுவோர் திருவாளர், வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள், வக்கீல், தெற்குரதவீதி தூத்துக்குடி என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

இரட்சணிய தீபிகை:— இது சிங்கப்பூரிலிருந்து திரு, சா. சு. பாக்கியநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாதந்தோறும் புத்தக உருவுடன் தமிழில் வெளிவருது. மதபோதனை, வர்த்தமானம் வரலாறு, கற்பனைக் கதை ஆகிய பல நல்ல பொருள்களைத் தாங்கிவரும். இதனைத் தளராது ஆதரித்தல் மதப்பற்றுள்ள மக்களின் கடமையே. சிங்கப்பூர் 71. செலிகிரோடு இரட்சணிய தீபிகை ஆசிரியர் என்ற விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

மலாய்மணி:— இது சிங்கப்பூரிலிருந்து யுவ கார்த்திகை எட்டாம் நாள் தொடங்கி ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் தமிழில் வெளிவரும் வாரத்தாள். மக்கள் பல துறைகளிலும் முன்னேறும் வழிகளையும், தேசப்பாதுகாப்பையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியரும் வெளியிடுவோரும் திரு, V. J. சுந்தராஜு அவர்கள் ஆவர். இப்புதினத்தாள் நன்னோக்கத்தினின்று திறம்பாது உலகிற்கு நன்மை புரியும் என நம்புகிறோம். சிங்கப்பூர் 152-5', செலிகிரோடு, மலாய்மணி காரியாலயத்திற்கு எழுதிப் பெறலாம்.

தஞ்சை பெரியகோயில்:— இது தஞ்சைக் களிக்குளம் எனத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் விதந்து ஓதப்பெற்ற சிவகெங்கைத் திருக்குளக் கரையில் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவும், அருணகிரிநாதர் திருப்புகழும் பெற்றுச்சிறந்து விளங்குவது. பெரியநாயகிசமேத பிரகதீசுவரர் வீற்றிருந்தருளும் இத்திருக் கோயிலின் வரலாறுகளை விளக்கி, தஞ்சை அரண்மனை தேவத்தானங்களின் அறநிலையப்புரவலராகிய திருவாளர், J. M. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் தமிழில் எழுதிப் பதிப்பித்து வெளியிட்ட புத்தகத்தைப் பற்றிய மதிப்புரை 'சிவநேசன்' எட்டாவதாண்டு 259ம் பக்கத்தில் வந்துள்ளது. பின்னும் ஷெ கோயில் வரலாறுகளை அவர்களே ஆங்கிலத்தில் எழுதி ஐப்பசி உகவ. ராஜ ராஜ தேவர் விழாவன்று வெளியிட்டுள்

ளார்கள். முன் தமிழில் வெளியிட்ட விஷயங்களிலும் அதிகமாகப் பல விஷயங்களைச் சேர்த்தும் திருக்கோயில், கோபுரம், பெரிய நந்தி, கருவூர்த்தேவர், ராஜராஜ சோழர், சிவாஜி முதலாம் இன்னும் பல திருவுருவச்சித்திரங்களும், கல்வெட்டுக்களும் சேர்த்து இக்கோயிலின் வரலாறுகளையும், சிறப்புக்களையும் ஆங்கிலப் புலமையாளர் பலரும் அறியும் வண்ணம் பிரிண்டிங் டிமி கிரௌன் ஒன்றுக்கு எட்டு, நூறுபக்கங்கொண்ட செட்டிக் காயிதத்தில் அச்சியற்றிப் புத்தகமாக்கி வெளியிட்டுள்ளார்கள். தமிழில்திருவிசைப்பா, திருப்புகழ் ஆகியவைகள் உரையுடன் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில்சிறந்த அறிஞர்கள் இதனைமுற்றும் ஆய்ந்து மிக மிகப் பாராட்டுவார் என்பது திண்ணம்.

ஆதியில் மூவர்பாடிய பதிகத் தொகை.

தோடுடைய செவியன்முதற் கல்லீ றாகச்
சொற்பதி னாயிரமாந் தோணிபுரத் தரசு
நாடுடை கூற்றாகி யெண்ணுகே னந்த
நாற்பத்தொன் பதினாயி ரந்நாவுக் கரசு
மூடுடைய பித்தாவென் றடிகொடுத்தா னந்த
மூப்பத்தே ழாயிரமா மொழிநாவ லரசர்
எடுடைய திருப்பதிக மிலக்கத்தீ ராயிர
மியம்பியருள் பெற்றிறைவ னடிசேர்ந்தா ரிவரே.

இப்போதிருக்கும் பதிகத் தொகை.

தொகுத்தவொரு மூவர்களு மருளிச் செய்த
சொற்பதிக மெழுநூற்றுத் தொண்ணூற் றேழு
பகுத்ததமிழ் விரகனுமை பாலுண்ட பெருமான்
பகர்பதிக மூந்நூற்றெண் பத்துநான் காகும்
வகுத்ததிரு மறைக்காடு திறக்கப் பாடும்
வாகீசர் முந்நூற்றுப் பன்னி ரண்டாம்
மிகுத்ததிரு நாவலூர் வன்றொண்டப் பெருமான்
வியன்பதிக நூற்றொன்று மிளம்புங் காலே.

திருஞான சம்பந்த ரருளிச் செய்த
திருப்பதிகம் பொதுவகையா லோரேழ தாகும்
அருணாவுக் கரையர்பிரான் முப்பத்தே ழாகு
மாரூர நம்பியொரு நான்காகு மாக
வருஞானப் பொதுப்பதிக நாற்பத்தெட் டாகு
மற்றுமிந்தப் பதிகமொடு மறைதேரு மூவ
ரிருநாவின் மொழிந்ததிருப் பதிகம் யாவு
மெண்ணியிடி லெழுநூற்றுத் தொண்ணூற் றேழே.

இம்மூன்று செய்யுட்களும் ஓர் ஏட்டுப் பிரதியிற் காணப்பட்டன.

—சித்தாந்தம்.